www.padippakam.com



27

# ஈழத்தவர் வரலாறு

## கி.மு.ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.1621ஆம் ஆண்டு வரை....

**-செங்கை ஆழியான்-**

**சி**ங்கை நகரில் ஆட்சிப்பொறுப்பேற்ற காலிங்கச் சக்கரவர்த்தி தனது தலைநகரைக் குடாநாட்டிற்கு மாற்றிக்கொண்டான். அதற்காக யாழ்ப்பாண நகரியைத் தனது மந்திரி புவனேகபாகுவைக் கொண்டு கட்டுவித்தான். யாழ்ப்பாண நகரியை நல்லூர்க் குடியிருப்பில் உருவாக்கிய புவனேகபாகு கந்தவேட்கும் அங்கு ஓர் ஆலயம் எடுப்பித்தான்.

யாழ்ப்பாண வரலாற்றில் சம்பந்தப்படும் மூன்றாவது புவனேகபாகு கி.பி. 1450 ஆம் ஆண்டிலிருந்து 1467 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண

சப்புமல் குமரயா என்ற செண்பகப்பெருமாள் என்ற சிறீசங்கபோதி புவனேகவாகு ஆவான்.

### முதலாவது ஆலயம்

எனவே ,நல்லைக்குலவிய கந்தவேட்குக் கோயில் கட்டப்பட்டது. கி.பி.948 ஆம் ஆண்டிலா அல்லது கி.பி. 1248 ஆம் ஆண்டிலா என்பது முடிவு செய்யப்படவேண்டியதொன்றாகும். முதலாவது ஆலயம் கி.பி.948 ஆம் ஆண்டு கட்டப்பட்டதெனக் கொண்டால் அது இராசப் பிரதிநிதியாக விளங்கிய புவனேகவாகுவால் பூநகரி நல்லூரிலே கட்டப்பட்டிருக்கவேண்டும். அவ்வாறன்றி முதலாவது ஆலயம் கி.பி.1248 ஆம் ஆண்டு காலிங்க ஆரியச் சக்கரவர்த்தியின் மந்திரியாகவிருந்த புவனேகவாகுவால் கட்டப்பட்டதாயின் யாழ்ப்பாண நல்லூரிலேயே அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

இவ்விரு கருத்துக்களிலும் பின்னதே சாத்தியமானதும் ஏற்றதுமாகவுள்ளது. எனவே கி.பி. 1248 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசனின் மந்திரியாக விளங்கிய புவனேகவாகு / புவனேகவாசர் குருக்கள் வளவு என்று இன்று வழங்கப்படும் அருள் விளக்கத்துடன் இன்று விளங்கும் திருக்கோயில் அமைந்துள்ள இதேயிடத்தில் முதலாவது கந்தவேள் ஆலயத்தைக் கட்டுவித்தான் எனத் துணியலாம்.



இராச்சியத்தை ஆண்ட தென்னிலங்கை இளவரசன்

### கந்தசுவாமி கோவிலின் அழிவு

கனகசூரியசிங்கையாரியன், வடவிலங்கையை ஆண்டவேளை தென்னிலங்கையில் கோட்டை அரசனாக ஆறாம் பராக்கிரமபாகு என்பான் விளங்கினான். அவன் ஆரிய அரசர்கள் மீது மாறாத பகைமை கொண்டிருந்தான். 1450 ஆம் ஆண்டு தனது வளர்ப்புப் புத்திரனும் சேனாதிபதியுமான



சப்புமல் குமரயா (செண்பகப்பெருமாள்)

என்பானைப் பெரும்படையுடன் உத்தரதேசத்தைக் கைப்பற்றுமாறு அனுப்பினான். அவனது படை முன் எதிர்நிற்கவியலாது, தமிழ்ப்படை தோற்றது. கனகசூரியசிங்கையாரியான் தன்னிரு புதல்வர்களுடன் இந்தியாவிற்கு ஓடிப்போனான். அனுராதபுரத்திலிருந்து பெரும்படையுடன் புறப்பட்ட சப்புமல்குமரயா உத்தரதேசம் எல்லாம் வெற்றிகொண்டு யாழ்ப்பாண நகரினுள்ளே யாபாபட்டுன புகுவதற்கு முன் பெருநிலப்பரப்பில் அமைந்திருந்த சிங்கை நகரைத் தாக்கி அங்கிருந்த மாளிகைகள், கட்டிடங்கள் என்பனவற்றை அழித்தான்.

சப்புமல்குமரயா யாழ்ப்பாண தலைநகரிட் புகுந்து மதங் கொண்ட களிறெனக் கண்டாரைக் கொன்று அந்த நகர் ஆவணங்களெல்லாம் இரத்த வெள்ளம் பாய்ந்தோடும் ஆறுகளாக்கி நகரில் விளங்கிய மாடமாளிகைகளையெல்லாம் இடிப்பித்துத் தரைமட்டமாக்கினான். சீரும் சிறப்போடும் செழித்து விளங்கிய பொங்கொலி நீர்ச் சிங்கைநகர், சப்புமல்குமரயாவின் படையெடுப்பால் சிதைந்து அழிந்தது.

சிங்கை நகரை அழித்து தரைமட்டமாக்கிய சப்புமல்குமரயாவின் படை, நல்லூரிற் புகுந்தது. அப்படை யாழ்ப்பாணத்தைத் தாக்கியபோது நகரிலிருந்த மாடமாளிகைகள் தரைமட்டமாக்கப்பட்டன. பழைய தலைநகர் பாழாய்விட்டது. சப்புமல் குமரயாவின் யாழ்ப்பாண வெற்றியைப் புகழ்ந்து பாடும் 'கோகில சந்தேஷிய' எனும் குயில் விடு தூதுப் பிரபந்தம் ஒன்று யாழ்ப்பாணப்பட்டினத்தின் சிறப்புக்களையும் படைசென்ற பாதையில் நிகழ்ந்த யுத்த அழிவுகளையும் பெருமையாகப் பாடியுள்ளது. எனவே சப்புமல்குமரயாவின் படை தலைநகரைத் தரைமட்டமாக்கியது எனக் கொள்வதில் தவறில்லை. அவ்வேளை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலும் தகர்த்தெறியப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே கி.பி. 1248 ஆம் ஆண்டு புவனேகவாகு எனும் அமைச்சரால் முதன் முதல் கட்டப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கி.பி.1450 ஆம் ஆண்டு சப்புமல்குமரயாவின் படையெடுப்பால் தகர்த்தழிக்கப்பட்டது. தான்புரிந்த பாவத்திற்குப் பரிகாரம் தேடுவான் போன்று யாழ்ப்பாண நகரியை மீண்டும் புதுப்பித்த சப்புமல்குமரயா, அழிந்து போ[...] நல்லூர் கந்தசுவாமி கோயிலையும் மீண்டும் ஆக்கினான்.

ஆரியச் சக்கரவர்த்தியோடு செண்பகப் பெருமாள் கடும் போர் நிகழ்த்திய நாட்களில் அரண்களும் இராசதானியும் பெரிதும் அழிவுற,அவற்றை[...] செண்பகப்பெருமாள் திருத்தி[...] அமைத்தானென்றே கொள்ளவேண்டும். சப்புமல் குமாரன் யாழ்ப்பாணப் பட்டினத்திற் கோட்டைகளை காவலரண்களையும் அமைத்தான் என்று ராஜாவலி[...] சொல்வனவும் இக்கருத்திற்கு ஆதாரமாயுள்ளன.

சப்புமல்குமரயாவின் தந்தை மலையாள தேசத்திலிருந்து வ[...] ஒரு பணிக்கனாவான். 'ஆறாம்[...] பராக்கிரமபாகு அவனை உபசரித்து அவன் தேகவலியி[...] வாட்போர்த்திறத்திலும் ஈடுபட்டவனாய் தன் குலத்தினளாகிய ஒரு கன்னிகையை அவனுக்கு மண[...] முடிப்பித்தான். இவர்களுக்கு[...] பிறந்தவனே சப்புமல்குமரயா ஆவான். 'செண்பகப் பெருமா[...] தமிழ்க்குருதி தன் நாளங்களில் ஓடக்கொண்டவனாதலாலும் , தமிழுறப்பத்தியாளனேயாகிய அழகேஸ்வரன் காலந்தொட்டு ஜயவர்த்தன கோட்டையிலேயு[...] வழிபாடு பயின்று வந்தமையாலும் கோகில சந்தேசமுடையார் அவனைப் புத்தமதத் தாபகரெனப் புகழ்ந்தோதியவிடத்தும் தமிழ். பிரசைகட்கிதமாய்த் தமிழ்த் தெய்வ வழிபாடுகளையே யாழ்ப்பாணத்தில் வளர்த்திருப்பான் என்பதிற் சிறிதும் சந்தேகமன்று.

கி.பி.1450 ஆம் ஆண்டிலிருந்து 1467 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சப்புமல்குமரயா என்ற சிறிசங்கபோதி புவனேகவாகு குருக்கள் வளவு என்றவிடத்திலிருந்து அழிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மீண்டும் புதிதாகக் கட்டுவித்தான். படையெடுப்பின் போது அழிந்து சிதைந்து போன முதலாவது தேவாலயம் அமைந்திருந்த இடத்தில் அக்கோயிலை அமைக்காது புதியதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அமைப்பித்தான். அரண்மனை, அரசமாளிகைகள் என்பன அமைந்திருந்த பண்டாரவளவு, சங்கிலித்தோப்பு (பின்னர் வந்த பெயர்) என்பவற்றிற்கு அருகில் இக்கோயிலுக்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அவ்விடம் முத்திரைச் சந்தியில் இன்று கிறீஸ்தவ தேவாலயம் அமைந்துள்ள இடமாகும். அவ்விடத்தில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இரண்டாவது தடவையாக அமைக்கப்பட்டது.

(தொடரும்)